தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

வ.எண்	நேரம்	இடம்
1.	காலை 9.30	கன்னிவாடி
2.	காலை 10.15	வடுகபட்டி
3.	காலை 11.00	கணபதிபாளையம்
4.	காலை 11.45	தளவாய்பட்டணம்

மதிய உணவு இடைவேளை

வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 3.30	பெரியார் சிலை
2.	மாலை 4.15	அரசு மேல்நிலைப்பள்ளி (கோட்டைமேடு)
3.	மாலை 5.00	பூளவாடி ரோடு கார்னர்

தேர்தல் பணிக்குழு

101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

தாராபுரத்தில் த.வெ.க. வேட்பாளரை எதிர்த்து கேள்வி எழுப்பிய

கல்லூரி மாணவர்களை கைது செய்வதா?

திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா கண்டனம்!

தாராபுரம், செப். 29-

தாராபுரத்தில் வாக்குச் சேகரித்த த.வெ.க. வேட்பாளரை எதிர்த்து கேள்வி எழுப்பியவர்களை படம் பிடித்த மாணவர்களை விஜய் அரசு கைது செய்ததற்கு திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ. சத்யா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் அக்டோபர் 06 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் சுயநல அரசியலால் மக்கள் மீது திணிக்கப்பட்டு மக்களின் வரிப்பணம் நேரம், காலம் வீணாகிறது இதனால் வாக்காளர்கள் கோபத்தின் உச்சத்திற்கே சென்று

இதற்கு காரணமாக இருந்தவர்கள் வேட்பாளராகி மீண்டும் வாக்கு கேட்டு வரும் போது தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளர் திருமதி சத்தியபாமா மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளர் திருமதி மரகதம் குமரவேல் ஆகியோர் வாக்கு சேகரிக்க செல்லும் இடத்தில் எல்லாம் ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்கள் தாங்கள் வாக்களித்து வெற்றிப்பெற செய்தவர்கள் தங்கள் சுயநலத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததை ஏன் எதற்கு எதனால் பதவியை ராஜினாமா செய்தீர்கள் என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். இதை சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் பிரச்சாரத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து வருகின்றனர் இதை திராவிட வெற்றிக் கழகம் ஜனநாயகத்தின் வெற்றியாக பார்க்கிறது.



இந்நிலையில் நேற்று முன் தினம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொட்டிக்காம் பாளையம் ஊராட்சியில் வாக்கு சேகரிக்க தங்கள் கிராமத்திற்கு வந்த த.வெ.க. வேட்பாளர் திரு மதி சத்தியபாமா அவர்களை ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்கள் கேள்வி எழுப்பி வாக்குவாதம் செய்து உள்ளனர் இதை அந்த கிராமத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் கைபேசியில் பதிவு செய்து கொண்டு இருக்கும் போது ஆளும் கட்சி தரப்பினர் காவல்துறையை ஏவி கைபேசியில் பதிவு செய்யக் கூடாது பதிவை எடுக்கச் சொல்லி மிரட்டி உள்ளனர்.

இது ஒன்றும் தனிப்பட்ட ஒரு வரின் அந்தரங்க விஷயங்களை பதிவு செய்ய வில்லை பொது வெளியில் நடப்பதை பொதுச் சமூகம் பதிவு செய்வது தார்மீக உரிமை உண்டு என்று மாணவனுக்கு ஆதரவாக கிராமத்தினர் குரல் கொடுத்த போது அவர்களை காவல்துறை சுற்றி வளைத்து வாகனத்தில் ஏற்றி சென்று குண்டடம் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்று பல் வேறு பிரிவுகளின் கீழ்க்கண்ட நபர்கள் நாச்சிமுத்து, பக்தவச்சலம், ராசு குழந்தைவேல், சிறிதர், குணசேகரன், கோவிந்தராசு ஆகியோர் மீது இந்திய தண்டனைச் சட்டம் குற்ற எண் 321/26, U/S 189(2), 126(2),296(B), 115(2),351(3) BNS R/W 4 OF TNPHW ACT & 3(1) OF TNPPDL ACT ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து வாக்களிக்கும் ஜனநாயக கடமையாற்ற முடியாமல் சிறையில் அடைத்து உள்ளது பாசிச த.வெ.க. அரசு.

செத்தே பிறக்கும் குழந்தையைப் போன்று தேர்தலுக்கு முன்பே முடிவு தெரிந்து விட்டதால் தங்களுக்கு எதிரானவர்களை காவல்துறை மூலமாக அச்சுறுத்தும் ஜனநாயக விரோத நடவடிக்கையை திராவிட வெற்றிக் கழகம் கண்டனம் தெரிவித்து கொள்வதோடு கைது செய்யப்பட்ட அனைவர் மீதும் போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்று நிபந்தனை இல்லாமல் உடனடியாக விடுதலை செய்ய தமிழ்நாடு அரசை திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு மல்லை சி.ஏ. சத்யா தமது அறிக்கையில் கூறியுள்ளார்

மாற்றுத்திறனாளி சிறுமிக்கு எதிரான பாலியல் வன்கொடுமை:

அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அறிக்கை!

சென்னை, செப்.29 -

தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுராந்தகத்தில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாற்றுத்திறனாளி சிறுமி, பெற்றோர் இல்லாத நேரத்தில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட தாக வெளியாகியுள்ள செய்தி மனதை உலுக்குகிறது. தன்னைத் தானே முழுமையாகப் பாதுகாத்துக் கொள்ள முடியாத ஒரு குழந்தையைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம், ஒரு தனிப்பட்ட குற்றமாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. குழந்தைகளின் பாதுகாப்பையும், குறிப்பாக மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் நமது சமூகமும் அரசும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலை இது வெளிப்படுத்துகிறது.



10 வயது குழந்தைக்கு பதில் சொல்வாரா விஜய்!

இந்தச் சம்பவத்தை அறிந்தவுடன் மனம் பதறுகிறது. அந்தச் சிறுமி எந்த அளவுக்கு அச்சத்தையும் வேதனையையும் அனுபவித்திருப்பாள் என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. மாற்றுத்திறனாளி என்பதற்காக ஒரு குழந்தையின் கண்ணியம், பாதுகாப்பு, உடல் சுயாட்சி ஆகியவை எந்த வகையிலும் குறைவானவை அல்ல. மாறாக, அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பும் ஆதரவும் வழங்கப்பட வேண்டியது அரசின் கடமையாகும்.

பல சட்டங்கள் உள்ளன. குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டங்களும், மாற்றுத்திறனாளிகளின் உரிமை களைப் பாதுகாக்கும் சட்டங்களும் நம்மிடம் உள்ளன. தமிழக அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையும், குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன.

ஆனால் சட்டங்கள் இருப்பது மட்டும் போதாது; அவை தரையில் செயல்பட வேண்டும். குறிப்பாக, மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், புகார் அளிக்கும் பாதுகாப்பான வழிமுறைகள், உடனடி மருத்துவ மற்றும் உளவியல் ஆதரவு, சட்ட உதவி, விசாரணையின் போது குழந்தைக்கு ஏற்ற அணுகுமுறை ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒருபுறம், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளைப் பெற்ற வுடன் கைவிடும் மனநிலை இன்னும் சில இடங்களில் இருப்பதை நாம் பார்க்கிறோம். மறு புறம், மாற்றுத்திறனாளி குழந்தையை அன்போடு வளர்த்து, கல்வி கொடுத்து, சமூகத்தில் சமஉரிமையுடன் வாழச் செய்யும் பெற்றோர்கள் இருக்கிறார்கள். அத்தகைய குடும்பத்தின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் ஒரு குழந்தை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவது மிகுந்த வேதனையையும் கோபத்தையும் ஏற்படுத்துகிறது.

முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்களே, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உங்க எது நேரடி பொறுப்பில் இருக்கிறது. நியாயமா இருக்கா?

இந்தச் சம்பவத்தில் அரசு தன்னுடைய பொறுப்பைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். குற்றச்சாட்டு தொடர்பாக நேர்மையான, விரைவான மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உகந்த விசாரணை நடைபெற வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால், சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதைவிட முக்கியமாக, பாதிக்கப்பட்ட குழந்தைக்கும் அவரது குடும்பத்திற் கும் தேவையான மருத்துவம், உளவியல் ஆலோசனை, சட்ட உதவி மற்றும் பாதுகாப்பு ஆகியவை முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது வெறும் நலத்திட்டப் பிரச்சினை அல்ல; அது மனித உரிமை, குழந்தை உரிமை மற்றும் சமூக நீதியின் கேள்வி.

"எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும்; பரிதாபம் வேண்டாம். எங்களுக்கு உரிமைகள் வேண்டும்; வெறும் அறிவிப்புகள் வேண்டாம்."

இந்தச் சம்பவம் குறித்து அரசு மௌனம் காக்காமல், உணர்வுப்பூர்வமான மற்றும் பொறுப்பான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதே மாற்றுத் திறனாளிகள் சமூகத்தின் எதிர் பார்ப்பு.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; சட்டசபையில் எம்.எல்.ஏ.க்கள் கேட்டிருந்த 14,399 கேள்விகளுக்கு இதுவரை 1800க்குத்தான் பதில் வந்திருக்குதாமே!

போண்டி : ஆமாய்யா, நானும் ஒரு பேப்பர்ல அதை படிச்சேன்யா. எவ்ளோ 'ஸ்லோ' இதைத்தான் 'குதிரை வேக' அரசுன்னு சட்டசபையிலே விஜய் பதிவு செய்தாரோ!

முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி:

இந்தியா அபார வெற்றி!

திருவனந்தபுரம், செப்.29-

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான முதல் ஒருநாள் போட்டி திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, மேற்கிந்தியத் தீவுகள் முதலில் விளையாடியது.

முதலில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 295 ரன்கள் எடுத்தது.

296 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 41.4 ஓவர்களில் இலக்கை எட்டி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்: கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

நாள் : 30.09.2026

வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 4.00 மணி	கருங்குழி – மகளிர் சந்திப்பு
2.	மாலை 5.00 மணி	மதுராந்தகம் (கடப்பேரி) வேன் பிரச்சாரம்
3.	மாலை 6.00 மணி	சரவம்பாக்கம் வேன் பிரச்சாரம்
4.	மாலை 7.00 மணி	பெரும்பேர்கண்டிகை மகளிர் கூட்டம்
5.	இரவு 8.00 மணி	கீழ்அத்திவாக்கம் கூட்டுச்சாலை (வேன் பிரச்சாரம்)

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள்: 25.09.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.



தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் இடையே காலாப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் அ. செந்தில் (எ) ரமேஷின் பிறந்த நாளை புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் இரா.சிவா ஆகியோர் முன்னிலையில் தி.மு.க. நிர்வாகிகள் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியின்போது, பொதுக்குழு உறுப்பினர் ந.தங்கவேலு, தி.மு.க. வேட்பாளர் கு.சேது (எ) சேதுசெல்வம், இந்திரா நகர் தி.மு.க. பொறுப்பாளர் பசுபிக் சங்கர், சைதை மோகன், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், பி.சா.இளஞ்செழியப்பாண்டியன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் த.முகிலன், சிறுபான்மை அணி அமைப்பாளர் முகம்மது ஹாலிது, விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்கள் பிரபு, கார்த்திகேயன் உள்ளிட்ட பலரும் உடனிருந்து வாழ்த்துத் தெரிவித்தனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்டும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு,தாராபுரம் ஒன்றியம் சின்னபுத்தூர் ஊராட்சிப் பகுதியில் வீடு, வீடாகச் சென்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்கத் துண்டுப் பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். வாக்கு சேகரிக்கும் பணியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஏ.கே.சித்திக், இராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் மி.ஜோசப் பெல்சி, களக்காடு தெற்கு ஒன்றியச் செயலாளர் பி.சி.ராஜன், மாவட்டப் பிரதிநிதி சமூகை எஸ்.முரளி, திண்டுக்கல் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரி,தாராபுரம் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் செந்தில் குமார், இளைஞரணி நந்தகுமார் லோகேஷ், மாணவரணி துணை அமைப்பாளர் அருண்குமார், பழனிச்சாமி, பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.